**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C. No. 253/2025**

| | | | | |
|---|---|---|---|---|
| Deposition of LW 8 | | | Additional Witness Examined as : PW 3 | |
| Name | : அகோரமூர்த்தி | | Defence | : |
| Father Name | : சுப்ரமணியன் | | Court | : |
| Village | : சிறப்பு உதவி ஆய்வாளர், பெரம்பூர் காவல் நிலையம் | | Taluk | : |
| Calling | : | | | : |
| Age | : 56/2026 | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 27.03.2026 சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர் இல்லை. (U/s 355 BNSS Act ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்போது பெரம்பூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கின் சாட்சிகள் போலிசார் விசாரணைக்கு மாறுப்பட்ட சாட்சியம் அளித்திருப்பதாலும் சமாதானம் ஆகிவிட்டபடியாலும் நீதிமன்றத்தின் நேரம் கருதி ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். காவல்துறையில் பணிபுரிந்த வகையில் உதவி ஆய்வாளர் சேகர் அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். கடந்த 04.10.2025 தேதி 10.30 மணிக்கு பெரம்பூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சேகர் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது மயிலாடுதுறையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அமுதா க/பெ. மகாராஜன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று பின்னர் நிலையம் வந்து காவல் நிலைய குற்ற எண். 414/2025, BNSS பிரிவுகள் 296(b), 118(1), 74, 351(3) கீழ் வழக்கினை பதிவு செய்தார். அந்த **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகவும் முதல் தகவல் அறிக்கை**

**அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் கண்ணையன் மற்றும் செல்வகுமார் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் வரைபடத்தினை தயார் செய்தார். **பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆகவும், வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை விசாரணை செய்து வாக்குமூலத்தினை தனித்தனியே பதிவு செய்தார். பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில் குற்ற சம்பவம் உண்மை என தெரியவந்த நிலையில் எதிரியை தேடிய போது எதிரி கடந்த 04.10.2025–ம் தேதி 14.30 மணிக்கு எலந்தங்குடி பேருந்து நிறுத்தம் அருகில் நின்றுகொண்டிருந்த எதிரியை குற்ற காரணம் கூறி கைது செய்தும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார்.

4. இவ்வழக்கில் காயம் பட்ட அசா1ற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் வீரச்செல்வன் அவர்களை விசாரணை செய்து அவர்களது வாக்குமூலத்தினையும், காயச்சான்றிதழினையும் பெற்றார். அந்த **விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கின் எதிரிகளின் மீதான விசாரணையை முடித்து 26.11.2025, BNSS பிரிவுகள் 296(b), 118(1), 74, 351(3)ன் கீழ் இறுதி அறிக்கையை தாக்கல் செய்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கின் நேரடி விசாரணை அதிகாரி நான் இல்லை என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்கு செல்லாமல் சம்பவ சாட்சிகளை விசாரிக்காமல் எதிரியின் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.